# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜனவரி 6, 2024

Weekly E-paper • January 6, 2024




# ராமர் கோயிலும் விஜயகாந்த் மரணமும்!

சுப.வீரபாண்டியன்

## அமலாக்கத்துறையின் அத்துமீறல்கள்

சாரதா தேவி

## வகைவகையாய் வடை!

தலையங்கம்

## என்றும் தமிழர் தலைவர்

நூல் அறிமுகம் – வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஜனவரி 6, 2024 Weekly E-paper ● January 6, 2024


# ராமர் கோயிலும் விஜயகாந்த் மரணமும்!

**சுப.வீரபாண்டியன்**

பாருங்கள், ராமர் மீது பாஜகவுக்கு எவ்வளவு பக்தி என்று சிலர் நினைக்கக்கூடும். பாருங்கள், விஜயகாந்த் மீது மோடிக்கு எவ்வளவு பாசம் என்று வேறு சிலர் நினைக்கக்கூடும்!

இரண்டுமே உண்மை இல்லை! அவர்களின் பக்தியும் வேஷம், பாசமும் வேஷம்! தேர்தல், ஆட்சி, அதிகாரம் இவற்றின் மீது மட்டும்தான் அவர்களுக்கு உண்மையான நேசம்!

2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், ஜம்மு – ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் புல்வாமா மாவட்டத்தில், ஒரு தற்கொலைப் படைத் தாக்குதல் நடந்தது. அதில் இந்தியப் பாதுகாப்புப் படை வீரர்கள் 40 பேர் உயிரிழந்தனர். நாடு துயரத்தில் ஆழ்ந்தது. அதனைச் சொல்லிச் சொல்லியே 2019 தேர்தலில் பாஜக வெற்றி பெற்றது. எண்ணிப் பாருங்கள்! அதற்குப் பிறகு பாஜக அது பற்றிப் பேசி இருக்கிறதா?

அந்தத் தேர்தலோடு புல்வாமா முடிந்தது. இந்தத் தேர்தலுக்கு ராமர் கோயில் வந்திருக்கிறது!






மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை அடிக்கல் நாட்டப்பட்டதோடு நிற்கிறது. மழை, வெள்ளத்தால் நேர்ந்த பேரிடருக்கு உள்ளான மக்களுக்கு உதவுவதற்காக நிதி கேட்டால், ஒன்றிய அரசின் நிதி அமைச்சர் தூக்கி எறிந்து பேசுகிறார். அவருடைய குரலும், உடல் மொழியும் தமிழ் மக்களை அவமதிப்பதாக உள்ளது! ஆனால் அயோத்தியில் ஆயிரம் கோடிகளில் பணத்தை அள்ளி வீசுகிறது ஒன்றிய அரசு!

வடநாட்டுக்கு ராமர் கோயில் கும்பாபிஷேகம் போதுமானது! தென்னாட்டிற்கு ஏதேனும் வேண்டுமே என்று அவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்த போதுதான், விஜயகாந்தின் மரணம் நிகழ்ந்திருக்கிறது!

கடந்த எட்டு ஆண்டுகளாக விஜயகாந்த் உடல் நலமற்றிருந்த வேளையில், மோடியோ, அமித்சாவோ அவரை வந்து பார்க்கவே இல்லை! இப்போது கண்ணீர் விட்டு, கதறி, அங்கமெல்லாம் உருக அறிக்கை தருகிறார் பிரதமர் மோடி!

கடந்த சில நாள்களாகப் பிரதமரின் எக்ஸ் பக்கம் முழுவதும் விஜயகாந்த் பற்றிய உருக்கமான அஞ்சலியே நிறைந்து வழிகிறது!

தன் 40 ஆண்டுகால ஆருயிர் நண்பரை இழந்து விட்டதாக எண்ணி எண்ணி வருத்தப்படுகிறார் பிரதமர் மோடி, இவ்வளவு அன்பையும், இவ்வளவு சோகத்தையும் அவர் எப்படித்தான் தாங்கிக் கொள்கிறாரோ தெரியவில்லை. அவ்வளவு சோகமாக இருக்கிறது அவருடைய பதிவுகள் எல்லாம்!

தேர்தல் நடந்து முடிகிற வரையில் இந்த சோகம் அவர் நெஞ்சில் அப்படியே அப்பிக் கிடக்கும். விஜயகாந்த் ஆதரவு வாக்குகளைத் தங்கள் பக்கம் அள்ளிக்கொண்ட பிறகுதான், நம் பிரதமரின் சோகம் தேய்ந்து மடியும்!

அயோத்தி ராமரும், அண்மையில் மறைந்த விஜயகாந்த்தும் எப்படியாவது தங்களுக்கு உதவ மாட்டார்களா என்று கவலையுடன் காத்திருக்கிறது பாஜக!,

ஏமாற்றுவது அவர்கள் விருப்பம். ஏமாற மாட்டோம் என்று மக்கள் சொல்லப் போவதுதான் தேர்தலின் திருப்பம்! ●

# அமலாக்கத்துறையின் அத்துமீறல்கள்

சாரதா தேவி

சேலம் ஆத்தூரைச் சேர்ந்த 72 வயதான கண்ணையனும், 65 வயதான கிருஷ்ணனும் வங்கிக்கணக்கில் ரூ.500 பணம் வைத்துக்கொண்டு, மாநில அரசின் முதியோர் ஓய்வூதியத் தொகை வாங்கிக்கொண்டு, தமக்கிருந்த சொற்ப நிலத்தில் பாடாற்றி வந்த விவசாயப் பெருமக்கள்.

அவர்களுக்குக் கடந்த 2023, ஜூன் மாதம், 26 அன்று, ஜூலை 5 சென்னைக்கு வருமாறு அமலாக்கத்துறையின் அழைப்பாணை வந்துள்ளது! அமலாக்கத்துறை என்றால் ஏதோ, அம்பானிகளுக்கும், அமைச்சர்களுக்கும் தான் வரும் என்று அன்றாடங்காய்ச்சிகள் அக்கடா என்று இனி இருக்க முடியாது. அந்த அழைப்பாணையில், முகவரியில், அவர்கள் பெயரோடு அவர்களின் பட்டியலின சாதி அடைமொழி வேறு சேர்க்கப்பட்டுள்ளது.

பா.ஜ.க. சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் குணசேகரனின் கண்ணசைவில், அவர் சொன்னதை அப்படியே எழுதி, அந்த முதியவர்களை அச்சுறுத்தியிருக்கிறது அமலாக்கத்துறை. அந்த விவசாயிகள் அஞ்சி, அமலாக்கத்துறை அலுவலகம் வந்தபோது, வழக்கறிஞரை அனுமதிக்காமல், அவர்கள் குணசேகரனுக்குத் தர மறுத்த காராமணித்திட்டு, ராமநாயக்கன்பாளையத்தில் இருக்கும் தங்கள் 6.50 ஏக்கர் நிலம் பற்றி கேட்டு மிரட்டியிருக்கிறார்கள் அதிகாரிகள். 2020இல் அவர் மீது கிருஷ்ணன், கண்ணையன் சகோதரர்களால் போடப்பட்ட வழக்கை முறியடிக்க, இப்படி ஒரு பஞ்சாயத்தை நடத்தி அத்து மீறி இருக்கிறது அமலாக்கத்துறை.

வழக்கறிஞர் பிரவீணாவை இது தொடர்பாக, டிசம்பர் 31 அன்று விடிய விடிய கேள்வி கேட்ட நுங்கம்பாக்கம் காவல்துறை, மீண்டும் ஜனவரி 2 அன்று சேலம் கண்காணிப்பாளர் அலுவலகத்துக்கு அந்த விவசாயிகளை வரச்சொல்ல, அப்போதுதான் பிரவீணா இவர்களின் விசமத்தை சமூக வலைத்தளத்தில் பதிவேற்றி இருக்கிறார். இதில், மலை அடிவாரத்தில் இருக்கும் 600 ஏக்கர் நிலத்தை அபகரிக்க பெரும்புள்ளிகளின் பின்னணியும் இருக்கலாம் என அவர் சந்தேகப்படுகிறார். இப்போது அவர்கள் மீது சேலம் வனத்துறையை வைத்து அரிய விலங்குகளைக் கொன்றார்கள் என புதிய வழக்கைப் பதிய முயற்சிகள் நடப்பதாகத் தெரிகிறது.

கடந்த டிசம்பர் 1 அன்று அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரி, 20 லட்ச ரூபாய் லஞ்சம் வாங்கும்போது கையும் களவுமாகப் பிடிபட்டு, தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறையால் கைது செய்யப்பட்டது நம் நினைவுகளில் இருந்து இன்னும் நீங்கவில்லை. வருவாய்த்துறை துணை ஆணையரான பாலமுருகன், இந்தியக் குடியரசுத் தலைவருக்கு, அமலாக்கத்துறையின் அமைச்சர் நிர்மலா சீதாராமனைப் பதவி நீக்கம் செய்யும்படி, காட்டமாகக் கடிதம் எழுதி இருக்கிறார்.


நிர்மலா அம்மையாருக்குத் துறைகள் கொடுத்திருப்பதே அவற்றைக் கபளீகரம் செய்து, ஆன மட்டும் தங்கள் ஆசாபாசங்களுக்குப் பயன்படுத்திவிட்டு, மூடுவிழா நடத்தவே என்பதால், இதற்கெல்லாம் குடியரசுத் தலைவர் அசையப் போவதில்லை. மொத்தமாகப் பார்த்து மக்கள் வழி அனுப்பிவிடுவதைத் தவிர வேறு வழியுமில்லை. ●

சென்னை 47ஆம் புத்தகக் கண்காட்சி

கருஞ்சட்டைப் பதிப்பகம்

அரங்க எண்: 332 A / 332 B











தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## வகைவகையாய் வடை!




அண்மையில் திருச்சிக்கு வந்திருந்தார் பிரதமர் மோடி.

அவருடன் மேடையில் பேசிய முதலமைச்சர் ஸ்டாலின், அண்மையில் பெய்த பெருமழைச் சேதத்தால் பாதிக்கப்பட்ட தமிழகப் பகுதிதிகளைப் பேரிடர் பகுதிகளாக அறிவிக்க வேண்டும் என்றும், அதற்குரிய நிவாரண நிதியை விரைந்து தருமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ்நாடு முதல்வரின் கோரிக்கையைக் காதில் வாங்கிக் கொள்ளாத மோடி, அவர் தமிழகத்திற்கு வந்தது, அவரின் அமைச்சர்கள் வந்தது, தமிகத்தின் பெருமை என்று வகைவகையாக வடைகளை வாயால் சுட்டுத் தள்ளினாரே ஒழிய, தவறியும் முதல்வரின் கோரிக்கைக்கு எந்தப் பதிலும் கூறவில்லை.

மணிப்பூர், அதானி என்றால் ஒளிந்து கொள்ளும் மோடிக்கு முதல்வரின் கோரிக்கைகளுக்கு ஒழிந்து கொள்வது என்ன கஷ்டமா?

திருச்சியில் 20 ஆயிரம் கோடிகளில் திட்டங்களைத் தொடங்கி வைத்திருக்கிறார் மோடி.

சென்ற ஆண்டு இவர் தொடங்கி வைத்த எய்ம்ஸ் மருத்துவமனை இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறது.

இப்போது திருச்சி?

நிலாவிலேயே ஔவைப் பாட்டி வடை சுட்ட கதையைத் தெறிக்க விட்ட தமிழ்நாட்டில், மோடி சுட்டுத்தள்ளும் வடைகள் 'போணி' ஆகாது !

2024ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுடன் மூட்டை முடிச்சிகளைக் கட்ட இருக்கும் மோடி, அதற்கு முன்னர் தமிழ்நாடு முதலமைச்சரின் கோரிக்கைகளை நிறைவேற்றிப் 'புண்ணியம்' தேடிடுவார் என்று நம்புவோமாக !

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408




சந்தாரர்
ஆகிவிட்டீர்களா?

# திராவிட முழக்கம்

ஆண்டுச்சந்தா
**ரூபாய் 400/=**

தொடர்புக்கு:
122. என். டி.ஆர் தெரு,
ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம் அஞ்சல்,
சென்னை-600 024.


044-24726408 /
9940407468.

நூல் அறிமுகம்

# என்றும் தமிழர் தலைவர்

**வெற்றிச்செல்வன்**

இந்து தமிழ்திசை நாளிதழ் தந்தை பெரியார் குறித்து ஆழமாகவும், விரிவாகவும் அறிந்து கொள்வதற்காகக் கொண்டு வந்துள்ள “என்றும் தமிழர் தலைவர்” நூலினைக் கடந்த 23.12.2023 அன்று, பெரியார் திடலில் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் அவர்களும், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் வெளியிட்டனர். மொத்தம் 864 பக்கங்களுடன் வெளிவந்திருக்கும் இந்நூல் காலத்திற்கேற்ற கருத்துப் பெட்டகம்.




தந்தை பெரியார் குறித்த ஆசிரியர் கி. வீரமணி அவர்களின் பேட்டியுடன் தொடங்கும் இந்நூல் தமிழ்நாட்டின் பல்வேறு ஆளுமைகள், எழுத்தாளர்கள், இதழாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் வெளிவந்துள்ளது. பெரியார் குறித்த பன்முகப் பார்வை, பல்வேறு தளங்களில் செயல்படுவோரிடம் இருந்து வெளிக்கொணரப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளது, சிறப்புக்குரியது. மூத்த எழுத்தாளர்கள் மட்டுமின்றி இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் பலரின் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது கவனிக்கத்தக்கது.

வ.உ.சி, மறைமலையடிகள், சுத்தானந்த பாரதி ஆகியோரின் பெரியார் குறித்த பார்வையைக் கொண்டு பெரியாரைத் தமிழ்த்தேசியத்தின் அடையாளமாகக் காட்டியிருக்கும் ஏ.எஸ். பன்னீர்செல்வன் கட்டுரை, திராவிடம் தமிழ்த்தேசியம் இரண்டையும் குறித்த புரிதலைத் தருகிறது. அவ்வாறே ப.திருமாவேலன் கட்டுரையும், தமிழர் உரிமைத் தளத்தில் பெரியாரின் களங்களைத் தெளிவுபடுத்துகிறது.

தமிழ்நாட்டுக்கு வெளியே இயங்கும் ஜோகா சிங், கர்க சட்டர்ஜி, தேவி சட்டர்ஜி ஆகியோரிடம் இருந்து கட்டுரைகள் பெறப்பட்டு தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது நல்ல முயற்சி. அதில் குறிப்பாக, இந்தி பேசாத மாநிலங்கள்மீது கூர்வாளாகத் தொங்கிக் கொண்டிருக்கும் 2026 நாடாளுமன்ற மறுவரைவறை குறித்தும், பெரியாரின் தேவை குறித்தும் உணர்த்தும் கர்க சட்டர்ஜியின் எச்சரிக்கைக் கட்டுரை குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் தேசிய இனங்களின் நலன் குறித்த சிந்தனையைச் சுட்டிக் காட்டுகிறது.

உண்மையைவிட, பொய்கள் விரைவில் பரப்பப்பட்டு வரும் இன்றைய வாட்ஸ் அப் உலகில், பெரியார் மீதான அவதூறுகளுக்குச் சரியான மறுப்பை வழங்கியிருக்கிறது ச. கோபாலகிருஷ்ணனின் கட்டுரை. பெரியார் திரைப்படம் உருவாக்கப்பட்டபோது இசைஞானி இளையராஜா, நடிகை குஷ்பு தொடர்பாக எழுந்த சர்ச்சைகளைத் தெளிவுபடுத்துகிறது இயக்குநர் ஞான ராஜசேகரனின் பதிவு.

பெரியார் குறித்து பாரதிதாசன், கண்ணதாசன், முடியரசன், வேழவேந்தன், கருணானந்தம் ஆகியோரின் புரட்சிப் பாக்கள் புத்தெழுச்சி ஊட்டுகின்றன. சிறப்பான கவிதைத் தேர்வு. பேராசிரியர் சுப. வீரபாண்டியன், எழுத்தாளர் ஓவியா, வழக்கறிஞர் அருள்மொழி, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி சோமு, திராவிடர் கழகத் துணைப் பொதுச்செயலாளர் பிரின்ஸ், ஊடகவியலாளர் ஜீவசகாப்தன் ஆகிய திராவிட இயக்கத் தலைமுறைகளைப் பற்றிய விவரங்கள் அருமை. பெரியாருடன் பயணித்த மூத்த பெரியார் பெருந்தொண்டர்களான அரங்கநாயகி, பொத்தனூர் சண்முகம் ஆகியோர் குறித்த பதிவுகள் அரியவை மட்டுமன்று, அனைவரும் அறியவும் வேண்டியது. “பெண் ஏன் அடிமையானாள்?” புத்தகத்தின் சாகசப் பயணத்தை எளிமையான சொற்களில் விவரிக்கிறது நன்செய் பதிப்பாளர் தம்பியின் கட்டுரை. நூலில் ஆங்காங்கே இடம்பெற்றுள்ள ட்ராட்ஸ்கி மருது, ரவி பேலட், சுந்தரம், ஜீவா, கோகுலா ஆகியோரின் ஓவியங்கள் புத்தகத்தின் கவித்துவத்தைக் கூட்டுகின்றன. பெரியார் குறித்த வாசிப்புக் கையேடு பின்னிணைப்பாக நூலில் சேர்க்கப்பட்டுள்ளது இளைய தலைமுறையினருக்குச் சிறந்த வழிகாட்டி.

இத்தனை சிறப்புகளுடன் “என்றும் தமிழர் தலைவர்” நூலினைக் கொண்டு வந்துள்ள ஆசிரியர் குழுவின் உழைப்பு பாராட்டுவதற்குரியது.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian